பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை
26 11 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்-

1. இந்திய அரசியல் சாசனம் நீதி சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெறக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
3. கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிவாரண முகாம்களை அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
4. கால்நடை பராமரிப்புத்துறை நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் பங்காற்றி வருவதாக மத்திய பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் தெரிவித்துள்ளார்.
5. சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்கியது.

இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

இந்திய அரசியல் சாசனம் நீதி சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன தினத்தையொட்டி இன்று மாலை புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நமது அரசியல் சாசனம் நமக்கு வழிகாட்டியாக திகழ்வதாகக் குறிப்பிட்டார்.

மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்க வேண்டும் என்ற முயற்சியின் பயனாக நீதித்துறைக்கான புதிய நடைமுறைக் சட்டம் கொண்டுவரப்பட்டதாக அவர் கூறினார்.

சமூக நீதியின் அடித்தளமாக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர், மக்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 53 கோடிக்கும் மேற்பட்டோர் வங்கிக் கணக்குகளை தொடங்கி இருப்பதாகவும், நான்கு கோடிக்கும் கூடுதலான மக்களுக்கு கான்கிரிட் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாகவும் இதனால் சமூக நீதி நிலைநாட்டப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் தெரிவித்துள்ளார்.

இது நாளை மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை புயலாக வலுப்பெறக்கூடும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) ---20 செகண்ட்*

இதன் காரணமாக நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்ளிலும், வட மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) ---60 — செகண்ட்*

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று கனமழை பெய்துள்ளது.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் இன்று காலை முதல் விட்டு விட்டு மழை பெய்தது.

**[]<<<>>>[]**

கனமழை மற்றும் அதி கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிவாரண முகாம்களை அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலி வாயிலாக முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்துவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

வெள்ளநீர் தேங்கி பயிர்கள் சேதமடையாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், தடையில்லா மின் விநியோகம் உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது மழை நீரை அகற்றுவதற்கான மோட்டார் பம்புகள், விழுந்த மரங்களை அப்புறப்படுத்துவதற்கான ஜெ சி பி எந்திரங்கள், ஜெனரேட்டர்கள், படகுகள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே முதலமைச்சர் உத்தரவின் பேரில் திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புப்படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படை குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இரண்டு தேசிய மீட்புக்குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு முதல்நிலை மீட்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

கனமழை மற்றும் அதிகன மழையை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முழு வீச்சில் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ்ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் உள்ள பேரிடர் மேலாண்மை மாநில கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழ் சமுதாயம் உலகம் முழுவதும் அறியப்படுவதற்கும், போற்றப்படுவதற்கும் அதன் கலைகளே காரணம் என்று மாநில சிறு குறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்தில் இன்று நடைபெற்ற விழாவில் கைவினை கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி பேசிய அவர், மாமல்லபுரத்தில் உள்ள குடைவரை கோவில்கள், கற்சிற்பங்கள், மரச்சிற்பங்கள், உலோக சிற்பங்களின் பிறப்பிடமாக தமிழகம் உள்ளது என்றார்.

*( சவுண்ட்பைட் - தா மோ அன்பரசன் ) —35 — செகண்ட்*

**[]<<<>>>[]**

வெண்மை புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் வர்க்கீஸ் குரியனின் பிறந்த நாள் இன்று தேசிய பால்வள தினமாக கொண்டாடப்பட்டது.

மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகங்கள் இணைந்து பால்வள தினத்தை கொண்டாடின.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங், உலகில் அதிக அளவு பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறினார்.

கால்நடை பராமரிப்புத்துறை நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் பங்காற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

பால் உற்பத்தித் துறைக்காக பாடுபட்டவர்கள் மற்றும் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கான தேசிய கோபால் ரத்னா விருதுகளையும் அமைச்சர் இந்நிகழ்ச்சியில் வழங்கினார்.

**[]<<<>>>[]**

தேர்தலில் வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை உச்சநீதிமன்றம் இன்று நிராகரித்தது.

தற்போது நடைமுறையில்உ ள்ள மின்னணு வாக்குப்பதிவு முறையில் முறைகேடுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதிகள் திரு விக்ரம்நாத், திரு பி பி வரலே ஆகியோரைக் கொண்ட அமர்வு நிராகரித்தது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மக்களவைத் தேர்தலையொட்டி தாக்கல் செய்யப்பட்ட இதேபோன்றதொரு பொதுநல மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறித்த விவரங்களை அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்கு ஒன்றை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்ரமணியம், திரு ஜோதிராமன் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது கள்ளக்குறிச்சி மாவட்டஆட்சியர் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் வெள்ளிமலை — சின்னத்திருப்பதி இடையே சாலை அமைப்பதற்கான அனுமதிகளைப் பெற்று விரைந்து பணிகளை முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டனர்.

இம்மலைப்பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் குறித்த முழு விவரங்களையும் மாநில அரசு நான்கு வாரத்திற்குள் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் இந்திய அரசியலமைப்பு தினத்தையொட்டிநடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் கல்லூரி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

ஆசியாவிலேயே மிகப்பெரிய தெப்பக்குளமான திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஹரித்ரா நதி தெப்பக்குளத்தில் இன்று படகு போக்குவரத்து தொடங்கப்பட்டது.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறை மாவட்டத்தில் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக ஆட்சியர் திருமதி மகாபாரதி அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் குந்தா அணையிலிருந்து இரு மதகுகள் வழியாக வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்ட சுற்றுலாத் தலங்களில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மீண்டும் துணிப்-பை பயன்படுத்தும் நோக்கில் பத்து ரூபாய் செலுத்தி துணிப்-பை வழங்கும் எந்திரத்தை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்கியது.
இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.
இதேபிரிவில் தனிஷா கிராஸ்டோ – துருவ் கபிலா இணை, சுமித்ரெட்டி - ஷிக்கிரெட்டி இணை, தீப் ரம்பையா – சிம்ரன் சிங்கி, சயாநித் ஜோஷி – காவியா குப்தா இணைகளும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்கியது.
இதில் இந்தியா, ஜப்பான், கொரியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.
நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

***End of News***